23.04.2025

O.S.No. 91/2024

DW1– சங்குகிருஷ்ணன்– த/பெ. சிவனையா நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.04.2025

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. நான கிரையம் பெற்றதாக சொல்லும் காந்திமதி நாதனிடம் என் கிரைய ஆவணத்திற்கு முன்பு வேறு எதும் முன் ஆவணம் உள்ளதா என்றால் அது அவர்களுடைய பரம்பரை சொத்து.

2. நான் சொல்வதுபோல் காந்திமதிநாதனுக்கு இது பரம்பரை சொத்து இல்லை என்றும் முன் ஆவணம் இல்லாமல் புல எண்.106/1, 107/1 க்கு எந்த முன் ஆவணங்களும் கிடையாது என்றால் சரியல்ல. அது அவர்களுடைய மூதாதையர் சொத்து.

3. அம்பலவாணன் பிள்ளை மகன் பெயர் காந்திமதிநாதன்.

4. புல எண்.104/3 சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் புல எண்.104/3 என்ற ஒரு சொத்தே ஸ்தலத்தில் கிடையாது.

5. பிராதுதபசில் சொத்தை வாதி அனுபவம் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. புல எண்.104/3 ல் உள்ள பிராது 1ம் தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறான சொத்தே ஸ்தலத்தில் கிடையாது.

6. நெற்பயிர் விவசாயம் செய்வதற்காக அடங்கல் பதிவேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. கிராமநிர்வாக அலுவலர் தாக்கல் செய்யும் ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

8. புஞ்சை நிலங்களில் நெல்பயிர்கள் செய்ய முடியாது, கிராமநிர்வாக அலுவலர் நெல்பயிர் செய்யமுடியும் என அடங்கலில் குறிப்பிட்டுள்ளார் என்றால் புஞ்சை நிலங்களில் நெல்பயிர் சாகுபடி செய்யமுடியும். தாவா சொத்தில் கிணறு அமைத்து மூன்று போகம் நான் நெல்பயிர் சாகுபடி செய்துவருகிறேன்.

9. புல எண்.104/3 வாதி அனுபவத்தில் உள்ள சொத்து என்றும், புல எண்.104/1 மற்றும் 104/2 சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரியல்ல.

10. புல எண்.105 ல் உள்ளநிலங்கள் அரசுபுறம்போக்கு நிலங்கள் என்றால் சரியல்ல. பொதுபணித்துறையினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் ஆகும்.

11. புல எண்.105/33 பி– ன் வழியாக தான் தாவா சொத்திற்கு வரமுடியும் என்றால் சரியல்ல. தாவா நிலத்திற்கு எவ்வாறு வேண்டுமானலும் வரலாம்.

12. புல எண்.104/3 ல் கீழ்புறம் வாதி நெல்பயிர் சாகுபடி செய்துவருகிறார் என்றால் சரியல்ல. அவ்வாறான சொத்தே ஸ்தலத்தில் கிடையாது.

13. புல எண்.104 ன் கீழ்புறம் புல எண்.106/1, தென்புறம் புல எண்.107/1 என்றால் சரியல்ல. கீழ்புறம் புல எண்.106/1 ஏ மற்றும் புல எண்.106/1 உள்ளது, தென்புறம் புல எண்.107/1 ஏ உள்ளது.

14. புல எண்.104 மற்றும் புல எண்.106, புல எண்.107 ஆகிய சொத்துக்கள் இணையாக உள்ளது என்றால் சரியல்ல. புல எண்.104 ல் சொத்தே கிடையாது.

15. கிரையம் வாங்கும்போது 2 ம் தபசில் சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் காந்திமதிநாதன் அனுபவத்தில் உள்ளது.

16. வாதி என் மீதும், எனது மகன் மீதும் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான், நாங்கள் அவரை கடப்பாறையால் தாக்கியதாக புகார் அளித்தார், அந்த வழக்கில் நாங்கள் 2017 ம் ஆண்டு நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டது.

17. மீண்டும் வாதி என் மீதும், என் மகன் மீதும் 25.05.2024 ம் தேதி காவல்நிலையத்தில் புகார்அளித்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

18. **என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சாட்சி ஆவணத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் வா.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

18. அளவுகற்களை மாற்றிவைத்ததற்காக தான் என் மீது காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் அளவுகற்களே கிடையாது.

19. புல எண். 104/3 ல் 78 செண்ட், புல எண். 106/1 மற்றும் புல எண். 107/1 ல் சேர்த்து மொத்தம் 2 ஏக்கர் 8 ¼ செண்ட் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தற்போது வழக்கில் 1 ஏக்கர் 8 ¼ செண்ட் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

20. சுடலைமுதது வாதியின் தாத்தா என்றால் சரியல்ல. சுடலைமுத்து என்ற ஆளே கிடையாது.

21. எனது முதல்விசாரணை மற்றும் எதிர்வழக்குரையில் சுடலைமுத்துபிள்ளை என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான்.

22. காந்தியாபிள்ளை சர்வே எண்.106, சர்வே எண்.107 ல் கண்ட 1 ஏக்கர் 8 ¼ செண்ட நிலம் ரூ.23,000/- பெற்றுக்கொண்டு சுவாதீனம் ஒப்படைப்பு கேட்டு 15.04.2010 ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

24. சர்வே எண்.106, சர்வே எண்.107 சொத்தை பொறுத்து காந்திமதிநாதன் வாதியின் மீதும், வாதியின் மனைவியின் மீதும் அ.வ.எண்.274/2010 என்ற வழக்கை அம்பசாமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவிவரம் எனக்கு தெரியாது. ஏனென்றால் அந்த புல எண்ணிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மேற்படி தாவா நிலுவையில் இருக்கும்போதே தாவா சொத்தை என் பெயரில் கிரையம் பெற்றதால் Transfer of Property Act –Sec.52 ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் எப்போது தீர்ப்பானது என்ற விவரம் எனக்கு தெரியாது.

25. அம்பசாமுத்திரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வாதி, என்மீது இந்திய தண்டனை சட்டம்பிரிவு 354 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மீது 3 முறை புகார் கொடுத்துள்ளார்கள், 3 முறையுமே முதல்விசாரணை பதிவு செய்து பின்பு இறுதிவிசாரணை பதிவு செய்யும்போது பொய்வழக்கு என தெரியவந்து Mistake of Fact என முடித்துவைக்கப்பட்டது.

26. ஒவ்வொரு மடைக்கும் விவசாயிகள் நலன்கருதி அரசால் சிமெண்ட வாய்க்கால் அமைக்கப்படும் என்றால் சரிதான். அது நஞ்சை நிலங்களுக்கு மட்டுமே, புஞ்சை நிலங்களுக்கு கிடையாது.

27. சிமெண்ட் கால்வாய்கள் தாவா சொத்தில் அமைக்கப்பட்டிருந்தது, அந்த கால்வாய்களை தகர்த்திவிட்டேன் என்பதற்காக ராமநதி உதவி செயற்பொறியாளர் திரு.முருகேசன் அவர்கள் எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது தவறு.

28. நான் பத்திரம் வாங்குவதற்குமுன்பு தாவா சொத்தை அளந்துபார்க்காமல் வாங்கினேன் என்றால் சரியல்ல.

29. கிரைய ஆவணத்தில் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. புல எண்ணும், விஸ்தீரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழமேல், தென்வடல் அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதை FMB பார்த்துதான் தெரிந்துகொள்ளமுடியும்.

30. நான் பிரபல கட்சியில் மாவட்ட அளவில் பொறுப்பில் உள்ளேன் என்றும், எனது மனைவி கடையம் யூனியன் சேர்மன் ஆக உள்ளார் என்றால் சரிதான்.

31. நான் செங்கமால் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான்.

32. புல எண்.104/3 ல் உள்ள சொத்து சுப்பு என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. அவ்வாறான சொத்தே ஸ்லத்தில் கிடையாது.

33. பிராது 1ம் தபசில் சொத்து காந்திமதிநாதனுக்கு பாத்தியப்படாத சொத்து என்றால் புல எண்.104/3 ல் சொத்தே ஸ்லத்தில் கிடையாது.

34. பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து காந்திமதிநாதனுக்கு எந்த ஒரு பதிவு ஆவணமும் கிடையாது என்றால் புல எண்.104/3 ல்

சொத்தே ஸ்லத்தில் கிடையாது. எனவே நான் 1ம் தபசில் சொத்தை பொறுத்து "அ" பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை.

35. அம்பலவாணன் பிள்ளை மகன் காந்திமதிநாதன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் தேதி குறிப்பிட்டு கூறஇயலாது. ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது உயிருடன் இருந்தார்.

36. புல எண்.107/1, புல எண்.107/1ஏ, புல எண்.107/1பி, புல எண்.107/1சி உட்பிரிவு செய்யப்பட்டது சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.106/1, புல எண்.107/1ஏ–க்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

37. 2ம் தபசில் சொத்தை பொறுத்து சுடலைமுத்து ஆண்டு அனுபவம் செய்துவந்தபின்பு அவரது வாரிசுகள் தற்போது அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. சுடலைமுத்து என்ற நபரே கிடையாது.

38. நான் வாங்கிய சொத்திற்கான அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

39. புல எண்.106/1, புல எண்.107/1ஏ–க்கான அடங்கல், FMB, பட்டாக்களை தாக்கல் செய்துள்ளேன்.

40. நான் பெற்ற பட்டா எண்.217 எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பெறப்பட்டது என்றால் சரியல்ல.

41. வாதி சரியான அளவுகளுடன் தாக்கல் செய்துள்ளார், நான் மோசடியான ஆவணங்களை கொண்டு கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

42. சர்வே எண்.104/3 ன் வடபுறம் வாய்க்கால் உள்ளது, அந்த வாய்க்கால் கீழ்புறம் வழியாக தெற்கே வருகிறது என்றால் சரியல்ல. அவ்வாறான சொத்தே ஸ்தலத்தில் கிடையாது.

43. 1ம் தபசில் சொத்து பாசன கால்வாய் வடபுறம் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறான சொத்தே ஸ்தலத்தில் கிடையாது.

44. குற்றவியல் நீதிமன்றத்தில் வாதி என் மீது கொடுத்த வழக்கில் வாதி எனக்கு எதிராக சாட்சியம் அளித்தார், ஆனால் என் தரப்பில் நான் எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதி சொத்து தன்வசம் தான் உள்ளது என்று சொல்லியுள்ளார்.

45. வாதி தாக்கல் செய்துள்ள முன்வழக்கு சொத்துதான் தற்போதுள்ள 2ம் தபசில் சொத்து என்றால் சரியல்ல.

46. 04.09.2013ம் தேதியில் நான் கிரையம் வாங்கியதாக கூறும்போது, காந்திமதிநாதன் என்பவருக்கு பிராது 2ம் தபசில் சொத்தில் அனுபவம் கிடையாது என்றால் சரியல்ல.

47. காந்திமதிநாதன் எனக்கு கிரையம்கொத்த காலத்தில் அவருக்கே அனுபவம் இல்லாத சொத்தை எனக்கு கிரையம் கொடுத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

48. பிராது 2ம் தபசில் சொத்தை வாதி சட்டகாலத்திற்கு மேலாக ஆண்டு அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

49. பிராது 2ம்தபசில் சொத்திற்கு மூலஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பட்டா உள்ளது.

50. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில், பக்கம் எண்.5ல் சொல்லியுள்ளவாறு "மேற்படி சொத்துதொடர்பான மூலஆவணம் நாளதுதேதியில் ஒப்படைத்துவிட்டேன்" என்றால் அது தவறு என்னிடம் பட்டாதான் கொடுத்தார்கள். மூலஆவணம் தரவில்லை.

51. எனது முன்சுவான்தாரர்களிடம் 2ம் தபசில் சொத்தில் அனுபவம் இல்லை என்பதால் சுவாதீனப்பரிகாரம் வாதிக்கு, வாதியின் மனைவிக்கு காந்திமதிநாதன் உரிமை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அது வேறு சொத்தாக இருக்கலாம்.

52. பட்டா எண்.1731ல் வாதியின் பெயர் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பக்கத்தில் சுப்பு என்ற பெயர் உள்ளது என்றால் சரியல்ல. சுப்பு என்ற நபரே கிடையாது.

53. எனது நிலத்திற்கு தண்ணீர் எவ்வாறு வருகிறது என்றால் எனது கிணற்றின் மூலம் வருகிறது.

54. புதுகால் பாசனத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிறது என்றவிவரம் எனக்கு தெரியாது.

55. புதுகால் விவசாய சங்க தேர்தலில் தற்போது யார்தலைவராக இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அ.தி.மு.க ஆட்சியில் ஒருமுறை நான் தலைவராக இருந்துள்ளேன். அப்போது செயலாளர்கள் ஜெயபால், காசி ஆகியோர்கள் இருந்தார்கள், ஆண்டுகள் ஆனதால் சரியாக ஞாபகம் இல்லை.

56. நான் சுமார் 100 ஏக்கர் நிலம் வைத்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன், என்னிடம் 200 ஏக்கருக்கு மேல்நிலம் உள்ளது என்றால் சரியல்ல.

57. என் இடம் 100 ஏக்கர் நிலம் உள்ளதால் அனைத்து நிலங்களின் புல எண்ணும் சரியாக குறிப்பிட்டு கூற இயலாது. ஆனால் புல எண்.108, புல எண்.100, புல எண்.102 ல் தலா ஒருகிணறு உள்ளது, மேலும் உள்ள கிணறுகள் எந்த புல எண்ணில் உள்ளது என்று நினைவு இல்லை.

58. கிணற்றிற்கு எந்த ஆண்டு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. என்னிடம் 29 கிணறுகள் உள்ளது. 4 கிணறுகளில் சர்வீஸ் இல்லை.

59. புல எண்.104/1 மற்றும் புல எண்.104/2 என்ற இடத்தை நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் அவ்வாறான இடமே ஸ்தலத்தில் கிடையாது. அப்படியிருக்க நான் எப்படி கிரையம் வாங்குவேன்.

60. பொதுப்பணித்துறைக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் அரசுபுறம்போக்கு நிலங்கள் உள்ளது என்றவிவரம் எனக்கு தெரியாது.

61. நான் சுமார் 15 ஆண்டுகளாக பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலத்தை ஏலத்திற்கு எடுத்துவிவசாயம் செய்துவருகிறேன். ஏனென்றால் அந்த இடம் வழியாக தான் என் நிலத்திற்கு செல்லமுடியும்.

62. புல எண்.106, புல எண்.107/1ஏ–வில் காந்திமதிநானுக்கு சொத்தே கிடையாது என்றால் சரியல்ல. காந்திமதிநாதனுக்கு மேற்படி புல எண்ணை தவிர மற்ற புலஎண்ணில் சொத்துக்கள் உள்ளது.

63. மேற்படி புல எண்களுக்கு, புல எண்.109ன் வழியாக தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல.

64. நான் இந்த நிலம் வாங்குவதற்கு முன்பு புதுகால் விவசாயிகள் விவசாயம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த நிலங்கள் மேற்கே உள்ளது. அந்த நிலத்திற்கும் என் நிலத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

65. அரசு பொதுப்பணிக்கு சொந்தமான இடங்கள் உள்ளது. அதில் ஏலத்தில் 8 வது இடங்களாக புல எண்.106, புல எண்.108, புல எண்.107 ஆகிய இடங்கள் மொத்தம் 15 ஏக்கர் வரை நிலம் உள்ளது என்றால் இருக்கலாம்.

66. எனவே வாதி கோரியவாறு வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/—K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.